இரைமீன் துறை நீரோடி பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல்.

*வினா எண் 214— திரு. டி. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) விளவங்கோடு தொகுதியிலுள்ள இரைமீன் துறை யிலிருந்து நீரோடி வரையிலுமுள்ள கடலோரப் பகுதி மக்களுக்கு குடிநீர் வசதியில்லாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) இரைமீன் துறைக்கு ஏற்கெனவே குடிநீர் வசதி யளிக்கப்பட்டுள்ளது. மார்த்தாண்டம் துறை, வள்ளவிளை மற் றும் நீரோடி ஆகிய சிற்றூர்களுக்கு ஒருங்கிணைந்த கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று முடிக்கப்பட்டு 1981 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 12 ஆம் நாள் முதல் மக்கள் பயனில் இருந்து வருகிறது.

திரு. டி. மணி: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரை மீன் துறைக்குக் குடிநீர் அளிக்கும் திட்டம் அமலில் இருக்கிறது என்று கூறினார்கள். ஆனால் இரைமீன் துறையிலிருந்து தூத்தூர் சின்னதுறை வரையிலும் உள்ள குழாய்கள் பழுது அடைந்து இருக்கின்றன. நான் 1980 ஆம் ஆண்டிலேயே இந்தப் பிரச்சினையைப்பற்றி இங்கே கிளப்பி னேன். இதுவரையிலும் நான் இங்கே வருகிற வரையிலும் அந்தப் பணிகள் சீர் செய்யப்படவில்லை, ஆகவே சீரமைத்து அந்தப் பகுதி மக்களுக்குக் குடிநீர் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: என்னிடம் உள்ள விடையைத் தந்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொன் னதை எழுதி இன்றைய தினம் கொடுப்பார்களானால் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. டி. மணி: அந்தக் குழாய்கள் மூலமாக குடிநீர் கொடுப்பதிலே இயந்திரக் கோளாறுகள் இருப்பதாலே—ஏற் கெனவே அந்தக் கோளாறுகள் தாலுக்கா மட்டத்திலே மட்டு மல்ல, மாவட்டம் பூராவிலும் இருப்பதால், பஞ்சாயத்து ஒன்றியங்கள் காலாகாலத்தில் அந்த வேலைகளைச் செய்ய முடியவில்லை. அந்தப் பணிகளைச் சீராக செய்வதற்கு ஏற்ற முறையிலே குடி நீர் வாரியத்திற்கு அந்தப் பொறுப்புகளை ஒப்படைக்க அரசு முன்வருமா?

1981 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் நினைப்பதையெல்லாம் எழுதிக் கொடுத்தால் குடிநீர் வாரியத் தலைவரோடு கலந்து பேசி செய்ய முடிந்ததை இந்த அரசு செய்யும்.

திரு. ஏ. சி. சண்முகம் : கடலோரப் பகுதிகளிலே உள்ள மக்களுக்கு குடிநீர் கொடுக்க, கடல் நீரைக் குடிநீராக மாற்றி, அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கலவை பிர்க்காவில் குடிநீர்த் திட்டங்கள்.

*வினா எண் 215—திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஆற்காடு தொகுதி கலவை பிர்க்காவில் பல கிராமங்களில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத் திட்டம் எப்போது செயல் படுத்தப் படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டம், ஆற்காடு தொகுதியிலுள்ள ஆற்காடு மற்றும் திமிரி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்துள்ள 8 சிற்றூர்களுக்கு ஊரக குடி நீர்த் திட்டத்தின் கீழ் உடனடியாக குடி நீர் வசதியளிக்கத் திட்டமிட்டு அவைகளில் 5 சிற்றூர்களில் அனைத்து வேலைகளும் முடிவுற்றுள்ளன. இரண்டு சிற்றூர்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள ஒரு சிற்றூரில் வேலைகள் விரைவில் எடுத்துக் கொள்ளப் பட இருக்கின்றன.